பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 13 (25—4—68) வியாழன் ★ வெளியூர்: சித்திரை 14 (26—4—68) வெள்ளி [இதழ்: 261

கவிழ்ப்பு வேலையைக் கைவிடோம்--

நிஜலிங்கப்பா அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 24—

"காங்கிரசல்லாத ஆட்சிகளைக் கவிழ்க்கும் போக்கை காங்கிரசு கைவிடுமா?"

என்று நிருபர்கள் கேட்டதற்கு, அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் திரு. நிஜலிங்கப்பா பதிலளிக்கையில்,

"கவிழ்ப்பது அவசியம் என்றால் கவிழ்ப்போம்; ஒத்துழைப்பது அவசியம் என்று கருதினால் ஒத்துழைப்போம்"

என்று கூறினார்.

காந்தியார் கொள்கைக்கு மாறாகக் காங்கிரசு ஆட்சி

நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் வெ. கிருஷ்ணமூர்த்தி குற்றச்சாட்டு

வேலையில்லாத பொறியர்களுக்குக் கடன் வழங்க யோசனை

புதுடில்லி, ஏப். 23 -

"தொழிலாளிகள், தொழிலாளர் வர்க்கம் ஆகியவைகளுக்கு எதிரான கொள்கையை மத்திய அரசு கடைபிடித்துவருகிறது"

என, நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி குற்றஞ்சாட்டினார்.

தொழிலாளர் மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு திரு. வி. கிருஷ்ணமூர்த்திமீது மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் காந்தியார், கதர் அணியும் இயக்கத்தைத் துவக்கினார்; ஆனால், மத்திய அரசிலுள்ள காங்கிரசு ஆட்சி, கணக்கீட்டு இயந்திரத் திணிப்புக் கொள்கையைக் கடைபிடித்துப் பலருக்கு வேலை வாய்ப்பைக் கெடுக்கிறது.

'கணக்கீட்டு இயந்திரத் திணிப்புக் கொள்கையினால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாது' என்ற மத்திய அரசின் கூற்றை என்னால் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

'பத்திரிகையாளர் ஊதியக் குழுவின் பரிந்துரைகளை, பத்திரிகை முதலாளிகள் கட்டாயம் அமுலாக்க வேண்டும்' என்று நிர்ப்பந்தப்படுத்த வேண்டிய அதிகாரம் மத்திய அரசுக்கோ மாநில அரசுக்கோ இல்லாதபோது, பத்திரிகையில் பணியாற்றும் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழியில்லை. இதனால், பத்திரிகைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தால், அதற்காக அவர்களைக் குறைகூறிப் பயனில்லை.

பொறியியல் வல்லுநர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, வேலையில்லாத பொறியியல் வல்லுநர் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய சொந்தப் பொறுப்பின் மீது ரூ. 25,000—தொழில்களைத் துவங்குவதற்கு—கடனாக வழங்க வேண்டும்."

மாவட்டந்தோறும் தலைமை கல்வி யதிகாரி

அமைச்சர் அறிவிப்பு

சேலம், ஏப். 25—

'தமிழ் நாட்டிலுள்ள செகண்டரி கல்வி நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், சரியான முறையில் செம்மைப்படுத்தவும் மாவட்டந்தோறும் உயர்தரத் தலைமைக் கல்வி அதிகாரி ஒருவரை நியமிக்கலாம் என்ற யோசனை தமிழக அரசின் பரிசீலனையில் இருக்கிறது"

என, தர்மபுரி மாவட்ட ஆரம்ப ஆசிரியர்கள் சங்கக் கூட்டத்தில், கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பேசுகையில் தெரிவித்தார்.

விமானப் போக்குவரத்து துறையிலும் இந்தி!

மக்களவையில் செ. கந்தப்பன் கண்டனம்

புதுடில்லி, ஏப். 23—

"சென்னையிலுள்ள மீனம்பாக்கம் விமான நிலையத்தை அனைத்து நாட்டு விமான நிலையமாக்குவதுடன், சேலத்தில் சிறிய விமான நிலையத்தையும் நிர்மாணிக்க வேண்டும்"

என்று நாடாளுமன்ற மக்களவையில், சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகையில், கழக உறுப்பினர் செ. கந்தப்பன் வற்புறுத்தினார்.

"உலகம் முழுவதும் உள்ள விமான நிலையங்களில் ஆங்கில மொழி பயன்படுத்தப்படுவதுதான் ஏற்ற முறை என்று கருதப்படும்போது, நம்முடைய நாட்டு விமானப் போக்குவரத்துத் துறையில் இந்தி மொழியைப் புகுத்துவதற்குப் பெருந்தொகை செலவழிக்கப்படுவதேன்?"

என்று அவர் வினவினார்.

நாட்டின் வரலாற்றையே உள்ளடக்கிய வாஷிங்டன்!

அறிஞர் அண்ணா காணவிருக்கும் அமெரிக்கத் தலைநகர்

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், நாளை (வெள்ளிக்கிழமை) அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டன் போய்ச் சேருகிறார். ஜார்ஜ் வாஷிங்டன் முதல் ஜான் எப். கென்னடி வரையில் அமெரிக்கத் தலைவர்கள் பலரது நினைவு நிலையங்களையும், புகழ்மிக்க பிற கட்டடங்களையும் அவர் பார்வையிடுவார். அமெரிக்க நாட்டு வரலாறே இந்தக் கட்டடங்களில் அடங்கியுள்ளதென்று சொல்லலாம்.

நகரம் பிறந்த கதை!

தலைநகர் வாஷிங்டன் அமைந்துள்ள இடம், கொலம்பியா மாவட்டத்தில் உள்ளது. 1790-ல் நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் ஜார்ஜ் வாஷிங்டன் தலைநகரை நிறுவ இந்த இடத்தை முதலில் தேர்ந்தெடுத்தார். 1800-ல் இரண்டாவது குடியரசுத் தலைவர் ஜான் ஆடம்ஸ் ஆட்சிக் காலத்தில், பிலடல்பியா நகரிலிருந்து அரசாங்கத் தலைமையகம் வாஷிங்டனுக்கு வந்தது; அப்போது வெள்ளை மாளிகையோ, சட்டமன்றக் கட்டடமான காப்பிட்டால் மாளிகையோ, கட்டி முடிக்கப்படவில்லை.

மத்திய அரசின் தலைநகருக்கு அமைப்பு வகுக்கும் பொறுப்பை புகழ்பெற்ற பிரெஞ்சுப் பொறியியலாளர் பியரி சார்லஸ் எல் பான்ட் என்பவரிடம் முன்பே ஒப்படைத்திருந்தார்—ஜார்ஜ் வாஷிங்டன்.

அமெரிக்க நாட்டு விடுதலைப் போரில் அமெரிக்கப் படைகளுடன் சேர்ந்து பிரிட்டிஷ்காரர்களை எதிர்த்து வீரத்துடன் போராடியவர், இந்த பிரெஞ்சுக் கட்டடக் கலைஞர். வெள்ளை மாளிகைக்கும், சட்டமன்றத்துக்கும் உரிய இடங்களை எல். பான்ட் தீர்மானித்தார். காப்பிட்டால் கட்டடம் தொடங்கி, வாஷிங்டன் நினைவு நிலையம் உள்ள இடம் வரையில் அவர் ஒரு நெடுஞ்சாலை அமைக்கத் திட்டமிட்டார். இது, 'மால்' என்று இப்போது குறிக்கப் பெறுகிறது.

ஒரு நூற்றாண்டுக்குப் பின்பு, வாஷிங்டன் நினைவு நிலையத்திலிருந்து இன்றைய லிங்கன் நினைவாலயம் வரையில் 'மால்' சாலை நீடிக்கப்பட்டது.

அழகிய 'பொட்டமாக்' ஆற்றின் கரையில் லிங்கன் நினைவு நிலையம் விளங்குகிறது.

இரு நினைவு நிலையங்களுக்கும் இடையில் கண் கவரும் நீராழி அமைக்கப்பட்டது.

பூங்கா நகர்

வாஷிங்டன் நகரில் பெருந் தொழில் எதுவும் கிடையாது. அங்கு முக்கியமாக நடைபெறுவன—அரசாங்கப் பணிகளும், உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தலைநகரைக் காண வந்து போவோரது தேவைகளை நிறைவு செய்வதுமேயாகும்.

உள்ளங்கவர் கவின்மிகு மாநகரம் அது! எங்கு பார்த்தாலும் பசும்புல் வெளிகளும், பூங்காக்களும் மலிந்து கிடக்கும்.

பிரெஞ்சுக் கட்டடக் கலைஞர் விரிவான சாலைகளுக்கு வடிவம் வகுத்தார்; அமெரிக்க மாநிலங்களின் பெயர்களே இவற்றிற்குச் சூட்டப்பெற்றுள்ளன. சாலைகள் பலவகை வடிவங்களில்—கோணங்களாகவும், சதுக்கங்களாகவும், வட்டங்களாகவும் — கட்டடங்களுக்கு ஊடாக அமைந்துள்ளன. திறந்தவெளிகள் நிறைய உண்டு. மலர் உதிர் பூங்காக்கள் எழுநூறுக்குமேல் தலைநகரில் உண்டு என்றால் இயற்கை அழகுக்கு அங்கு பஞ்சமா என்ன? பெரிய பெரிய கட்டடங்களின் அமைப்புச் சிறப்புக்களும் சிறப்பித்துக் கூறத்தக்கவை.

புகழ்மிக்க சாலை

பெரும் புகழ்வாய்ந்தது — பென்சில்வேனியாச் சாலை; வெள்ளை மாளிகையில் தொடங்கி காப்பிட்டால் மாளிகை வரையில் இது செல்கிறது பெரும்பாலான அமெரிக்க அதிபர்கள் இந்தச் சாலை வழியே பவனி சென்றே, காப்பிட்டால் கட்டடத்தில் பதவியேற்பு உரைகள் நிகழ்த்தி, அரசு கட்டிலில் அமர்ந்து நாட்டை ஆண்டனர்!

வெள்ளை மாளிகை, காப்பிட்டால் மாளிகைகளோடு சுற்றுலா வருவோரைக் கவரும் பிற பெரிய கட்டடங்கள்—வாஷிங்டன், லிங்கன், ஜெபர்சன் நினைவு நிலையங்கள், தலைமை நீதிமன்றம், சட்டமன்ற நூலகம், ஸ்மித்சோனியன் கழகம் (இதில் பலப்பல அரும்பொருள் களஞ்சியங்கள் உண்டு) ஆவணக் களறி (பத்ரங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள இடம்), ஓவியக் கூடம் முதலியன.

புகழ்பெற்ற மூன்று பல்கலைக் கழகங்களும் தலைநகரில் உண்டு. அவை—ஜார்ஜ்டவுன், ஜார்ஜ் வாஷிங்டன், கத்தோலிக்கப் பல்கலைக் கழகங்கள் ஆகும்.

இலங்கை அகதிகட்கு இலவசக் கல்வி

திருச்சி, ஏப். 25—

இலங்கையிலிருந்து வெளியேற்றப்படுபவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின்கீழ், இலவசக் கல்விச் சலுகையை அளிக்கத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

இதுபோன்ற சலுகைகள் பர்மாவிலிருந்து தாயகம் வந்துள்ளவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வருகின்றன.

ரூபாய் நோட்டில் இந்தித் திணிப்பு!

புதுடில்லி, ஏப். 25—

மத்திய அரசு திர்மானித்தபடி புதிய பத்து ரூபாய் நோட்டுகளை ரிசர்வ் பாங்கி வெளியிடவிருக்கிறது.

அந்த நோட்டு, பழைய நோட்டு போலவே இருக்குமென்றாலும், அதில் புதிதாக இந்தி எழுத்துக்கள் புகுத்தப்பட்டிருக்குமெனத் தெரியவருகிறது.

புதிய நோட்டுகள், இதற்கு முன்பு வெளியிட்டபடி சிறிய அளவில் இருக்குமாம்; ஆனால், ரிசர்வ் பாங்கி கவர்னர் எல். கே. ஷாவின் கையெழுத்து, ஆங்கிலத்துடன் இந்தியிலும் இருக்குமாம்.

மேலும், அந்தப் புதிய நோட்டில் ரூபாய் மதிப்புக்கு உறுதியளிக்கும் உறுதிமொழி வாக்கியமும் இந்தியில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

குடி நீர் இல்லாத இடத்தில் குடியமர்த்தும் திட்டமா?

டில்லியின் விநோதச் செயல்!

நாடாளுமன்றத்தில் தொழிலாளர் மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெற்றபோது, மத்திய அரசு திட்டமிடாமல் ஒரு திட்டத்தை அமுல்படுத்திய நிகழ்ச்சி ஒன்று சுட்டிக்காட்டப்பட்டது.

"குடிபெயர்ந்தவர்களின் குடும்பங்களின் மறுவாழ்வுக்காக ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த ஐதராபாத் மாவட்டத்தில் 10,000 ஏக்கர் நிலப்பரப்பை அரசு ஒதுக்கியது. முதலில், 'அங்கு தண்ணீர் கிடைக்குமா' என்பதைக் கூடப் பரிசிலனை செய்து பாராமல், இப்படிப்பட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்தது விந்தையாகவே இருக்கிறது"

என்று ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த காங்கிரசு உறுப்பினர் பி. ஜி. ரெட்டி தெரிவித்தார்.

"இத் திட்டத்திற்குத் தேவையான நிலப்பரப்பு

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.,எம்.பி.

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 13 (25—4—68) வியாழன்

இதுவும் ஆதிக்கம்தான்!

'இந்தி மொழியை, எப்படியாவது இந்தி பேசாத பகுதி மக்கள் மீது திணித்துவிடவேண்டும்' என்பதை, இந்திய அரசாங்கம் குறியாகக் கொண்டிருக்கிறது. 'இந்திய அரசாங்கத்தின் இப்போக்கின் விளைவாக, இந்தியா பிளவுபட்டுச் சிதறிவிடக்கூடிய அபாயம் இருக்கிறது' என, இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த காங்கிரசு அல்லாத தலைவர்கள் மட்டுந்தான் எச்சரித்து வருகின்றனர். என்பதில்லை. குறிப்பிடத்தகுந்த காங்கிரசுத் தலைவர்களேகூட அத்தகைய எச்சரிக்கையைச் செய்துள்ளனர்—செய்துகொண்டும் வருகின்றனர்.

அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அல்லாது, இத் துணைக்கண்டம் முழுவதிலுமுள்ள கல்வித் துறையைச் சேர்ந்த—'கல்வி நிபுணர்கள்' என ஒப்புக்கொள்ளப்பட்ட அனைவருமே, 'இந்தித் திணிப்பால் நாட்டின் ஒற்றுமைக்கு ஊறுநேர்ந்திடக்கூடும்' எனக் கவலை தெரிவித்து வருகின்றனர். நீதித் துறையைச் சேர்ந்த புகழ்பெற்ற நீதிபதிகளும் வழக்குரைஞர்களும்கூட, நாட்டின் ஒற்றுமை குலைந்துவிடாமல் பாதுகாத்து வருவதற்காக, 'இந்தித் திணிப்பு முயற்சியைக் கைவிட்டுவிட வேண்டும்' என இந்திய அரசுக்கு நல்லுரை கூறிவருகின்றனர்.

ஆனால், 'நாட்டின் ஒற்றுமை சீர்குலைந்துவிடக் கூடாதே' என்ற நல்லெண்ணத்தில், இவ்வாறு பலரும் கூறிவருகின்ற நல்லுரைகளுக்கு, உரிய மதிப்பை இந்திய அரசு தந்திட விரும்பவில்லை. 'எப்படியாவது இந்தியைத் திணித்தே ஆகவேண்டும்' என்ற தனது முடிவை, ஒவ்வொரு துறையிலும் செயலாற்றுவதிலேயே ஆர்வம் கொண்டிருக்கிறது. எனவே, இந்தித் திணிப்புக்கு எதிராக எழக்கூடிய கிளர்ச்சியும், அடுத்தடுத்துத் தலைதூக்கியவண்ணம் உள்ளது. எதிர்ப்புக் கிளர்ச்சி நிலையாக இல்லாது ஒழிந்திட வேண்டுமானால், தனது இந்தித் திணிப்பு ஆசையையும் இந்திய அரசு உடனடியாகக் கைவிட்டாக வேண்டும். இந்தியைத் திணிக்கத்தான் எடுத்துக்கொண்டுவரும் மறைமுக—நேரடி நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்திவிட இந்திய அரசு முனைந்திட வேண்டும்.

மறைமுகமாகவும் நேர்முகமாகவும் இந்தியைத் திணித்துத் தீருவதென முடிவுகட்டி, இந்தியைத் திணித்துவருகின்ற போக்கு நீடித்திருக்கின்ற வரையில், அத்திணிப்புக்கு எதிராகக் கிளர்ச்சி நீடிப்பதும் எதிர்பார்க்கக்கூடியதேயாகும்—அது இயல்புமாகும். எனவே, விரும்பாத மக்கள்மீது திணிப்பு இருக்கின்ற வரையில், அவர்களிடமிருந்து கிளர்ச்சி கிளம்புவதும் இயல்பேயாகும்.

கிளர்ச்சிக்குக் காரணம், இந்திய அரசாங்கத்தின் இந்தித் திணிப்பு. திணிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும்பட்சத்தில், கிளர்ச்சிக்கும் இடமில்லாமல் போய்விடும்.

ஆனால் இந்திய அரசோ, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டில்லாத—இந்தியை விரும்பாத மக்கள்மீது, இந்தியைத் திணிப்பதிலேயே முழுமூச்சாக ஈடுபட்டுக்கொண்டே, 'கிளர்ச்சி கூடாது; அரசியல் இலாபம் கருதியே கிளர்ச்சியைச் சிலர் தூண்டிவருகின்றனர்' என்றெல்லாம் கூறி, உண்மை நிலையை மறைத்து உபதேசமும் செய்துவருகிறது. 'இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பே இல்லை' என்றுகூட—எதிர்ப்பின் அளவைக் குறைத்துக் காட்டி—தன்னையும் ஏமாற்றிக்கொள்ளுவதுடன், மற்றவர்களையும் ஏமாற்ற முயற்சிக்கிறது இந்திய அரசு.

தொடர்ந்து இந்தியைத் திணித்துவருகின்ற இந்திய அரசு, 'இந்தித் திணிப்பு கூடாது' என்ற எச்சரிக்கை கிளம்புவதைக் கேட்டதும், 'இந்தித் திணிக்கப்படுகிறது என்பது பொய்; இந்தித் திணிக்கப்படவே இல்லை' எனப் பசப்பியும் வருகிறது. 'இந்திய அரசு இந்தி மொழியைத் திணித்துத்தான் வருகிறது' என்பதை மெய்ப்பிக்க, மறுக்கமுடியாத தக்கதோர் சான்று இப்பொழுது கிடைத்திருக்கிறது.

தமிழகத்தில் ஒன்பது—மைசூரில் ஏழு—ஆந்திரத்தில் ஐந்து—கேரளத்தில் நான்கு—என்ற முறையில், மொத்தத்தில் இருபத்தைந்து பள்ளிகளை இந்திய அரசின் கல்வித்துறை நடத்திவருகிறது. இப்பள்ளிகளில் இதுவரையில் ஆங்கில மொழி மூலமே பாடம் கற்பிக்கப்பட்டு வந்தது.

மேலே குறிப்பிட்டிருக்கின்ற நான்கு தென் மாநிலங்களிலும், இந்திய அரசாங்கத்தில் பணிபுரிந்து வருகின்ற ஊழியர்களின் பிள்ளைகள் படிப்பதற்கென்றே இப்பள்ளிகளை இந்திய அரசாங்கம் நடத்திவருகிறது. இப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் பெரும் எண்ணிகையினர்—ஏறத்தாழ 15,000 மாணவர்கள்—இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டில்லாதவர்கள் ஆவர். இப்பள்ளிகள் ஒவ்வொன்றிலும் 40 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஆசிரியர்கள் அனைவரும் தென்னகத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இப்பள்ளிகள் அனைத்திலும், இன்றும்கூட, இந்தி கட்டாயப் பாடமாக இருந்துவருகிறது. இந்த நிலையில், பாடமொழியாக ஆங்கிலம் இருந்துவந்ததை மாற்றி, 'அடுத்த கல்வி ஆண்டிலிருந்து இந்தியைப் பாடமொழியாக ஆக்கவேண்டும்' என, இந்திய அரசாங்கக் கல்வித்துறை ஆணை பிறப்பித்திருக்கிறது.

மாணவர்கள், வினாத் தாள்களுக்கு, 'இந்தியிலும் விடை எழுதலாம்; ஆங்கிலத்திலும் விடை எழுதலாம்' என்றும் இந்திய அரசு கட்டளை பிறப்பித்திருக்கிறது. 'தங்கள் தங்கள் தாய்மொழிகளில் மாணவர்கள் விடை எழுதலாம்' எனக் கட்டளை பிறப்பித்திருந்தாலாவது, இந்தி பேசாத நான்கு தென் மாநிலத்தவரும், இந்திய அரசின் கட்டளையைப் பாராட்டி வரவேற்பார்கள்.

இந்தியைப் பாடமொழியாக ஆக்கப்படும் அரசாங்கத்தின் இக்கட்டளை, 'இந்தி மொழித் திணிப்பே ஆகும்' எனச் சொல்லத் தேவையில்லை. இந்திய அரசாங்கத்தின் இந்தி மொழி ஆதிக்கப் போக்குக்கு, இக்கட்டளையைவிட வேறு சிறந்த எடுத்துக்காட்டு இருந்திட முடியுமா?

இந்தி வெறியர்கள் இக்கட்டளையை மகிழ்ச்சியுடன் வரவேற்று, தலைமை அமைச்சரையும், மத்திய கல்வி அமைச்சரையும் வாழ்த்துவார்கள். தலைகால் தெரியாமல் துள்ளிக் குதிக்கவும் செய்வர்—அந்த வெறியர்கள்!

இந்திய அரசாங்க ஊழியர் பிள்ளைகளின் கல்வி பயிற்சிக்காகவே, 1863-ம் ஆண்டில், இந்தியா முழுவதிலும் மொத்தத்தில் 120 பள்ளிகளை மத்திய அரசாங்கம் துவக்கியது. ஆங்கிலத்தைப் பாடமொழியாகக்கொண்டே (வடநாட்டில் உள்ள சில பள்ளிகள் நீங்கலாக), இப்பள்ளிகளை இந்திய அரசாங்கம் துவக்கியது.

இப்பொழுது, அக்குறிக்கோளை மறந்துவிட்டு, இந்தியைப் பாடமொழியாக அப்பள்ளிகளில் திணிப்பதற்கான அவசியம் இந்திய அரசாங்கத்துக்கு ஏன் வந்தது? இந்தி வெறியர்களைத் திருப்திபடுத்தவும், இந்தி வெறியர்களின் ஆதரவைப் பெறவுமே அல்லாது, இந்தப் பாட மொழி மாற்றத்துக்கு வேறு எந்தப் பொருத்தமான காரணத்தை இந்திய அரசால் சொல்லமுடியும்?

இந்தப் பாடமொழி மாற்றத்தின் விளைவாக, அப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரும், பிள்ளைகளின் பெற்றோர்களும் கவலை கொண்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது. எப்படி அவர்கள் கவலை கொள்ளாமல் இருந்திட முடியும்?

இத்துறையிலும் இந்தி மொழி திணிக்கப்படுவது, எதிர்ப்பையும் கிளர்ச்சியையும் தோற்றுவிக்கத்தான் செய்யும். புதிய மொழிக் கிளர்ச்சிக்கு, இந்திய அரசின் கல்வித்துறை இப்பொழுது தெரிந்தே வித்திட்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

—கா. க.

மத்திய-மாநில அரசுகளின் உறவு நிலை

'மறு ஆய்வு செய்யக் குழு அமைக்க வேண்டும்'

தமது இருபதாண்டு அனுபவம் குறித்து அண்ணா விளக்கம்

யேல், ஏப். 25—

மத்திய அரசுக்கும்—மாநில அரசுகளுக்குமிடையேயுள்ள உறவு, மாநிலங்களுக்கு மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு ஆகியவை தொடர்பாகத் தமக்குக் கடந்த இருபதாண்டுகளில் போதுமான அனுபவம் ஏற்பட்டிருப்பதாகவும், அரசியல் சட்டத்தை மறு ஆய்வு செய்ய ஒரு குழுவை (கமிஷன்) நியமிக்க வேண்டும் என்று தாம் வற்புறுத்தியுள்ளதாகவும், கடந்த இருபதாண்டுக்கால அனுபவத்தை அந்தக் குழு மனத்தில் கொண்டு ஆராயலாம் என்றும், அண்ணா அவர்கள் யேல் பலகலைக் கழகத்தில், செய்தியாளர்கட்கு அளித்த பேட்டியின்போது தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"தமிழக அரசு ரூ. 100 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பியது; 'இத்தொகை அதிகம்' என்று மத்திய அரசு கூறியதால், அதை ரூ. 90 கோடியாகக் குறைத்தோம்; அதன் பிறகு மத்திய அரசினரோ, 'நீங்கள் ரூ. 90 கோடிக்கோ, ரூ. 100 கோடிக்கோ திட்டத்தை வைத்துக்கொள்ளலாம்; ஆனல் 'நாங்கள் ரூ. 40 கோடிதான் கொடுப்போம்; எஞ்சிய தொகையை நீங்களேதான் தேடிக்கொள்ள வேண்டும்' என்று கூறிவிட்டனர்.

"தமிழகத்தில் காங்கிரசல்லாத ஆட்சி நடக்கிறது என்பதால், 'குறைவான நிதி ஒதுக்கப்படுகிறது' என்று கூறுவதற்கில்லை; காங்கிரசுக் கட்சி ஆட்சியில் இருந்தபோதுகூட, அதன் திட்டம் மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

"நிதி ஒதுக்குவதில், மாநிலங்களின் மக்கட் தொகையை மட்டுமன்றி, தேவையையும் மத்திய அரசு கருத்தில்கொள்ள வேண்டும்."

தமிழக அரசின் இருமொழிக் கொள்கை

தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இருமொழிக் கொள்கைத் தீர்மானத்தை ஆதரித்து அண்ணா அவர்கள் கூறியதாவது:—

"சில ஆண்டுகளுக்கு முன்னால் மும்மொழித் திட்டத்தை வைத்துக்கொள்வது என்று மாநிலங்கள் ஒப்புக்கொண்டன. தமிழ்நாடு அத்திட்டத்தை செயல்படுத்தியது; ஆனால் இந்தி பேசும் மாநிலங்கள் அத்திட்டத்தைச் செயல்படுத்தவில்லை. கேரளத்தில் இருமொழித் திட்டத்துக்குக் குறிப்பிடத்தக்க ஆதரவு காணப்படுகிறது."

உணவு உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள்

உணவுத் தானிய விளைச்சலைப் பெருக்குவதற்காக மேம்படுத்தப்பட்ட விதைகள், கூடுதலான இரசாயன உரம், அதிகப்படியான கடன் வசதி ஆகியவற்றை அளிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை அண்ணா அவர்கள் குறிப்பிட்டு மேலும் கூறியதாவது:—

"இந்தியாவில் மொத்த உணவு உற்பத்தி, வளர்ந்துவரும் மக்கட் தொகைப் பெருக்கத்துக்குப் போதுமானதாக இல்லாத போதிலும், நாட்டில் பஞ்சநிலை இல்லை. இந்தியாவில் நிலத்தைச் சமூகஉடைமையாக்கும் திட்டம் தோல்வியடைந்து விட்டது. மக்கள் அதை விரும்பக்கூடும்; ஆனால் நடைமுறையில் கூட்டுறவுப் பண்ணை வேலை செய்யவில்லை."

வேலை வாய்ப்பு

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதியாக்கப்பட்டு விட்டால், பொறியர்கட்கும் தொழில் நுணுக்க வினைஞர்கட்கும் அதிக வேலை வாய்ப்புக் கிட்டும்."

வியட்நாம் பிரச்சினை

வியட்நாம் பிரச்சினை பற்றிய வினாக்களுக்கு அண்ணா அளித்த பதிலாவது:—

"வியட்நாமைப் பற்றி ஏதும் பேசுவதைவிட, ஏதேனும் சிலவற்றைச் செய்வது நல்லது என்ற நிலையை நீங்கள் அடைந்திருக்கிறீர்கள்.

"வியட்நாம் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு, டெல்லி களமாக அமைவதைப் பெரிதும் விரும்புகிறேன். டெல்லி வெப்பமாயிருக்குமென்று அமெரிக்க—வியட்நாம் தரப்பினர் கருதுவரேயானல், அதைவிடக் குளுமையான இடத்தைத் தமிழகத்தில் தேடித்தர நான் ஆயத்தமாக இருக்கிறேன்.

"எந்த இடத்தில் பேச்சு வார்த்தை நடத்துவது என—இடத்தின் பெயரைச் சொல்வதில்—இருதரப்பும் தவறு செய்துவிட்டன; ஒவ்வொரு தரப்பும், 'இன்னின்ன இடத்தில் நடத்தலாம்' என யோசனை செய்வதற்குப் பதிலாக, 'ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கூறுங்கள்' என்று அவர்கள் ஐ. நா. தலைமைச் செயலாளர் ஊ-தாண்டைக் கேட்டிருக்க வேண்டும்; அதை இருதரப்பும் ஏற்றிருக்க வேண்டும்."

"வியட்நாமில் அமெரிக்கா இருப்பதற்கு எதிராகப் பொதுமக்கள் கருத்து இந்திய நாட்டில் வலிமையாக உள்ளதா?" என்று கேட்டபோது, அண்ணா குறிப்பிட்டதாவது:—

"பிற நாடுகளின்—மொத்தக் குறிப்பாக அமெரிக்கா போன்ற நேச நாடுகளின் செயல்கள் பற்றி நாங்கள் கடும் கருத்துக்களை உணர்த்துவதில்லை."

காஷ்மீர் பிரச்சினை

"இந்தியாவின் காஷ்மீர்க் கொள்கையிலும், பாதுகாப்புத் துறை வரவு-செலவுத் திட்டத்திலும் மாற்றம் ஏற்பட வழிவகைகள் ஏதும் உண்டா?" என்று கேட்டபோது அண்ணா அளித்த பதிலாவது:—

'வெளிவிவகாரங்களில் முனைப்புக் காட்டுவதோ, வழிகாட்டும் துறையில் பங்கு ஏற்பதோ மத்திய அரசின் கையில்தான் இருக்கிறது; மாநிலங்களிடம் இல்லை. எனது தனிப்பட்ட கருத்துகளும் விவகாரமாகாது; மத்திய அரசின் கருத்துக்களோடுவைத்து அவை குழப்பப்பட்டும் விடலாம்."

கம்யூனிஸ்டு படையெடுப்பு?

"இந்தியாமீது கம்யூனிசப் படையெடுப்பு அபாயமிருப்பதாக நான் கருதவில்லை; ஆனால், இந்தியாவைக் கம்யூனிசம் மேற்கொள்ளக்கூடும்; ஏனெனில், அங்கே வறுமையும்—வேலையில்லாத் திண்டாட்டமும்—பிற்படுத்தப்பட்ட நிலைமையும் எப்போதும் உள்ளன"

என்று மற்றொரு வினாவுக்குப் பதிலளிக்கையில் அண்ணா கூறினார்.

இந்தியாவில் பஞ்சமா?

"கடந்த ஆண்டில், வறட்சியால் இந்தியா வருந்தியது; பீகாரில் பஞ்ச நிலைமையே நிலவியது; ஆனல் இந்த ஆண்டில் நல்ல மழை பெய்துள்ளது; எனினும், இந்தியாவில் ஒட்டுமொத்தமாக உணவுப் பற்றுக்குறை நிலவுகிறது.

குடும்பக் கட்டுப்பாடு

"வேளாண்மைத் துறையைச் சீர்திருத்தவும், குடும்பக் கட்டுப்பாட்டை ஊக்குவிக்கவும் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன; ஆனல், தமிழகமும் மராட்டியமும் குடும்பக் கட்டுப்பாட்டில் மிகவும் முன்னேறியிருக்கிற அதே வேளையில், உத்தரப் பிரதேசத்திலும், மத்தியப் பிரதேசத்திலும், பீகாரிலும், வேறு சில மாநிலங்களிலும் பெரும் முன்னேற்றம் ஏதும் காணப்படவில்லை"

என்று குடும்பக் கட்டுப்பாடு பற்றி பதிலளிக்கையில் அண்ணா அவர்கள் கூறினர்கள்.

இந்தியாவின் திட்டம்

'திட்டமிடல் மூலம் பொருளாதாரத் துறையில் தன்னை நிர்மாணித்துக்கொள்ள இந்தியா முயன்று வருகிறது; ஆனலும், பெருமளவு உதவி தேவைப்படுகிறது; அந்நிய உதவி இல்லாவிட்டால், இந்தியாவின் திட்டம் இவ்வளவு பெரியதாக இருக்காது. அமெரிக்கா தாராளமாக உதவி செய்யவேண்டும்; அமெரிக்கா உதவி அளிப்பதானது, மற்ற நாடுகளிடமிருந்து உதவி கிடைப்பதற்கு வழி கோலுவதாகும்."

மேலும் ஒரு வினாவுக்குப் பதிலளிக்கையில அண்ணா சுட்டிக் காட்டியதாவது:—

(3-ம் பக்கம் பார்க்க)

அண்ணாவைக் கவர்ந்த 'மோனப் புல்வெளி'

பண்ணை வீட்டில் தங்கிச் சாகுபடி முறை பற்றி உரையாடல்

நியூஹேவன், ஏப். 25—

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஞாயிறு இரவு 'மோனப் புல்வெளி' என்னும் பண்ணை வீட்டில் ஜான் டி. பிரிஸ்கோ குடும்பத்தினரின் விருந்தாளியாகத் தங்கியிருந்தபோது, அவர்களின் விருந்தோம்பல், அண்ணாவுக்கு மட்டில்லா மகிழ்ச்சியளித்தது; எனவே திங்கள் காலையில் இங்கிருந்து புறப்படுவதைக்கூடச் சில மணி நேரம் தள்ளிவைத்துவிட்டு, சாகுபடி முறைகள் குறித்து அந்தக் குடும்பத் தலைவருடன் ஓய்வாக உரையாடினார். கனக்டிக்கட் மாநில வேளாண்மைக் கழகத்தின் தலைவர் ஆவார் திரு. ஜான் பிரிஸ்கோ.

'லேக்வில்' என்னும் ஊருக்கு அருகில் இந்தப் பாற்பண்ணை இல்லம் இருக்கிறது. பிரிஸ்கோ—அவரது மனைவி—இரு பிள்ளைகள்—ஒரு மருமகள்—ஒரு மகனுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ள காதலி ஆகியோர், முதலமைச்சரை, 'லேக்வில்' சென்று அழைத்து வந்தனர். வந்தவர் புகழ்பெற்ற விருந்தாளியல்லவா?

தென்னகத்தில் வாழ்ந்த தம்பதிகள்

ஒரு மகனுக்கும்—ஜான் ஏ. பிரிஸ்கோ—அவரது மனைவிக்கும் இந்தச் சந்திப்பு, வெறும் சாதாரண நிகழ்ச்சியாக இருக்கவில்லை. இளைஞர் ஜான் இரு ஆண்டுகள் தென்னிந்தியாவில்—மைசூர் மாநிலத்தில்—அமெரிக்க அமைதிப் படைத் தொண்டராகப் பணியாற்றியவர் அடுத்த இலையுதிர் காலத்தில் மீண்டும் மைசூருக்கு வர அவர் திட்டமிட்டுள்ளார். மாசச்சுசட்ஸ் தொழில் நுட்பக் கழகத்தில் (எம்.ஐ.டி.) டாக்டர் பட்டம் பெறுவதற்காக ஆராய்ச்சி செய்துவரும் அவர், மைசூர் வரவு-செலவுத் திட்டத் தயாரிப்பு முறைகள் பற்றிச் சிறப்புக் கட்டுரை எழுதவே இந்தியா செல்கிறார். இவருடன் இவரது மனைவியும் செல்கிறார்.

1965-ல் மைசூரில் ஒரு புத்தக ஆராய்ச்சித் திட்டத்தில் இந்தப் பெண்மணி ஈடுபட்டிருக்கையில் முதன் முதலாக இளைஞர் ஜான் சந்தித்தார்; அன்பு வளர்ந்தது; இருவரும் திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு ஒரு வயது மகன் இருக்கிறான்; இந்தச் சிறுவன் பெற்றோருடன் இப்போது இந்தியா போகவில்லை; பின்பு பாட்டியும் தாத்தாவும், மகனையும் மருமகளையும் பார்க்க மைசூருக்குப் போகும் போது பேரனையும் அழைத்துச் செல்வார்கள்.

'மோனப் புல்வெளி'யில் தமிழக முதலமைச்சருக்கு விழாக் கால விருந்து நடைபெற்றது. இந்திய நாட்டுக் கறி ஒன்றும் படைத்தார்கள். இந்தியாவில் இருக்கையில் ஜானின் மனைவி இதைச் சமைக்கக் கற்றுக் கொண்டார். விருந்தின்போது, இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பொது அக்கறையுள்ள பல பிரச்சினைகள் குறித்து அண்ணாவும் பிரிஸ்கோ குடும்பத்தாரும் நெடுநேரம் கருத்துப் பரிமாறிக் கொண்டனர்.

இந்தியத் தூதரின் நண்பர்கள்

பிரிஸ்கோவும் அவரது மனைவியும் இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதர் செஸ்டர் போலஸ்-அவரது மனைவி ஆகியோரின் நண்பர்கள் பல முறை தூதரின் கனக்டிக்கட் இல்லத்தில் அவர்களது விருந்தினராகத் தங்கியிருந்திருக்கின்றனர்.

தேனீ போலச் சுறுசுறுப்பாக உழைக்கும் அமெரிக்கப் பெண்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு—திருமதி பிரிஸ்கோ. 'தாய்' என்ற முறையில் தம் குடும்பப் பொறுப்புக்களோடு, பொதுப் பணிகளில் ஈடுபாடுள்ளவர் இவர்; பெண் வாக்காளர்கள் சங்கத்தின் வெளிநாட்டுக் கல்வி நிதி நிலையத்தின் தலைவி இவர். ஞாயிறு இரவே இந்த அம்மையார் தமிழக முதலமைச்சரிடம் விடை பெற்றுக்கொண்டார்; ஏனெனில், நியூயார்க் மாநிலத்தில் பூக்கிப்ஸி என்னுமிடத்திலுள்ள வாஸர் கல்லூரியில் ஒரு கல்வி மாநாட்டில் இவர் பங்கு கொள்ள வேண்டியிருந்தது.

ஞாயிறு இரவு பிரிஸ்கோ குடும்பத்தினருடன் தங்கியது அண்ணாவுக்கு மிகுந்த மகிழ்ச்சியளித்துள்ளது. அவர் உற்சாகத்துடனும், நல்ல தெம்புடனும் திங்களன்று இங்கு வந்து யேல் பல்கலைக் கழகச் சுற்றுலா மேற்கொண்டார்.

தமிழ்--கன்னட உறவு விழா

பெங்களூர், ஏப். 19—

பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் ஏப். 15-ம் நாளன்று, தமிழ்—கன்னட உறவு விழா கொண்டாடியது; கன்னட ஆசிரியர் திரு. சேஷப்பா வரவேற்புரை வழங்கினார். சங்கத் தலைவர் புலவர் க. சுப்பிரமணியன் தலைமை தாங்கினார்.

டாஸ்கர் நகர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. கே. ஜி. ஜி. அய்யங்கார், தமிழ்ச் சங்கம் கன்னட வகுப்பு நடத்திவருவதைப் பாராட்டிவிட்டுக் கன்னட வகுப்புத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.

சங்கச் செயலாளர் புலவர் மா. விசுவநாதன் நன்றி கூறினார்.

புத்தாண்டு விழா சொற்பொழிவு

புத்தாண்டு விழாவை, பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் கொண்டாடியது; புலவர் க. சுப்பிரமணியனார் தலைமை தாங்கினார். பேராசிரியர் தண். கி. வெங்கடாசலனார் தமது சொற்பொழிவில் இளவேனில் தொடக்கமே புத்தாண்டின் தொடக்கமென்றும் இப்பருவம் மணமிக்க மலர்கள் பூத்துக்குலுங்கும் பருவமாகையால் மக்கள் உள்ளமும் மகிழ்ச்சியால் மலர வேண்டுமென்று குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய புலவர் இராச. இராசமாணிக்கனார் நாடு நலம் பெற வேண்டுமானால் அன்பு—அருள்—அடக்கம் முதலிய பண்புகள் வளர வேண்டுமென்றும், வளர்க்க உறுதிகொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

மற்றும் கி. சந்தானம் பி.ஏ., இராசேசுவரி, புலவர் மா. சிவசங்கரன், நா. நீலகண்டன் மா. மணி ஆகியோரும் பேசினர்.

புலவர் மா. விசுவநாதன் நன்றி கூறினார்.

சென்னை 48-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றம்

சென்னை 48-வது வட்டம் குயப்பேட்டை எம். ஜி. ஆர். மன்ற நிர்வாகிகள் தேர்தல், 13—4—68 அன்று நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

அவைத் தலைவர் : வடிவேலு; செயலாளர் : டி. ஆர். சந்திரன்; பொருளாளர் : ந. சருணநிதி; துணைச்செயலாளர் : மணிமாறன்; செயற்குழு உறுப்பினர்கள் : கோவிந்தராசன், கோதண்டபாணி, சண்முகம், கிருட்டினமூர்த்தி; நூலக பொறுப்பாளர் : இளங்கோவன்.

தலையாமங்கலத்தில் கலை--இலக்கியப் பெருமன்றம்

தலையாமங்கலம் முத்தமிழ் மன்றச்சார்பில் 13—4—68 அன்று திரு. கோ. இரா. இராசகோபால் தலைமையில் தமிழ்ப் புத்தாண்டு விழா நடைபெற்றது; தோழர்கள் திரு. தி. தமிழ்வண்ணன், சி. இளமாறன், இரா. இனியன், முரடத்திராபதி ஆகியோர் பேசினர்.

அன்றே தமிழ்நாடு கலை-இலக்கியப் பெருமன்ற கிளை தலையாமங்கலத்தில் துவக்கப்பட்டு மு. முருகையன் தலைவராகவும், ப. கிருட்டிணசாமி துணைத்தலைவராகவும், தி. தமிழ்வண்ணன் செயலாளராகவும், சி. இளமாறன் துணைச்செயலாளராகவும், இரா. கனகசபை பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தென்னிந்திய சினிமாத் தொழிலாளர் சங்கம்

தென்னிந்திய சினிமாத் தொழிலாளர் சங்கத்தின் ஆண்டுப் பேரவைக் கூட்டம், 11—4—68-ல் திரு. கே. எஸ். கோபாலகிருட்டினன் பி.ஏ. தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : திருமதி மதுராபாய் செட்கர்; துணைத் தலைவர்கள் : கே. எஸ். கோபாலகிருட்டினன் பி.ஏ., ஜி. பலராமன், வி. எஸ். கோபிநாத், எம். தாந்தோணி; பொதுச்செயலாளர் : கே. சுப்பராயலு; செயலாளர்கள் : எஸ். கிருட்டினசாமி, சி. கே. நடேசன், சி. சம்பத், ஏ. சீனுவாசன்; பொருளாளர் : சி. சானகிராம் நாயுடு; மற்றும் 22-பேர் செயற்குழு உறுப்பினர்களும், 4-நிதிக் குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மின்கழகப் பொருட் கிடங்கு ஊழியர் சங்கம்

பரம்பிக்குளம் ஆளியார் மின் திட்டப் பகுதி—தமிழ் நாடு மின் கழகப் பொருட்கிடங்கு ஊழியர் சங்கக் கூட்டம், 7—4—68-ல் திரு. சிங்கராயன் தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : மு. சுப்பையன்; செயலாளர்; செயராமன்; பொருளாளர் : சுப்பிரமணியம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முற்றுப் பெற்றது.

பாபநாசம் முஸ்லீம் லீக் கிளை

பாபநாசம் நகர முஸ்லீம் லீக் செயற்குழுக் கூட்டம் 11—4—68ல் நடந்தபோது, கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : இ. கே. முகம்மது அலி; துணைத்தலைவர் : எம். ஏ. ஹாஜா மைதீன்; செயலாளர் : கே. ஏ. அப்துல்பஜீது; துணைச் செயலாளர் : ஜி. ஜெய்னுல் லாபுதீன்; பொருளாளர் : ஏ. டி. அப்துல் வகாப்; செயற்குழுவினர் : எம். ஏ. முகம்மதுகாசீம், பி. கே. முகம்மது இப்ராஹீம், இ. கே. ராஜ்முகம்மது வி. ஏ. முகம்மதுகாசீம், ஏ. கமால் பாட்சா.

இரங்கல்

சென்னை டி. டி. வி. உயர் பள்ளி ஆசிரியரும் வானொலிச் சிறுவர் சங்கப் பேரவையின் செயற்குழு உறுப்பினரும் ஆகிய திரு. என். எஸ். பானுகுமார் தமது 31-வது வயதில் ஸ்டான்லி மருத்துவமனையில் காலமானார்.

பானுகுமார் அனுபவமிக்க நல்லாசிரியர்; வானொலியில் குழந்தை நாடகங்கள் எழுதிவந்தவர்; பி.ஏ.-வரை படித்தவர்; பழகுதற்கு இனியவர்.

அவர்தம் பிரிவுக்காகச் சென்னை வானொலிச் சிறுவர் சங்கப் பேரவைத் தலைவர் புலவர் தணிகை, உலகநாதர், சென்னை ஆசிரியர் சங்கத் தலைவர் சரவணன், மாணவர் மன்ற நூலகம் எஸ். சேஷாசலம், ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால், த. பா. சந்திரன், எஸ். கனகசபை ஆகியோர் ஈமச்சடங்கின்போது இரங்கல் உரையாற்றினர்.

'அணுகுண்டு' பற்றி இந்தியாவின் கொள்கை

அமெரிக்கச் செய்தியாளரிடை அண்ணா விளக்கம்

நியூ ஹேவன், ஏப். 22—

"அணுசக்தியை அமைதிப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவது என்பதுதான் இந்திய அரசின் கொள்கை; அணுகுண்டு தயாரிப்பது அல்ல"

என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இங்கு நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் தெளிவுபடுத்தினார். அவர் மேலும் கூறியதாவது:—

"அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்துவிட்டதாக எங்கள் விஞ்ஞானிகள், எங்களுக்குக் கூறுகிறார்கள்.

"இப்போது எங்கள் நாடாளுமன்றத்தில் அவ்வப்போது சில உறுப்பினர்கள், 'அணுகுண்டுகளைத் தயாரிக்கவேண்டும்' என்று பேசுகின்றனர்; ஆனால் இதை அரசாங்கம் அவசியம் என்றோ, இயலக்கூடியது என்றோ நினைக்கவில்லை; ஏனெனில் இந்தப் போட்டியில் இறங்க நாங்கள் விரும்பவில்லை; ஆனால், ஆக்க வேலைகளுக்கு மட்டும் அணுசக்தியைப் பயன்படுத்த விரும்புகிறோம்."

நெய்வேலியில் அறிஞர் அண்ணா மன்றம்

3—4—68 அன்று நகர தி.மு.க. செயலாளர் சீதாராமன் தலைமையில் நெய்வேலி 21-வது வட்டத்தில் அறிஞர் அண்ணா மன்றம் துவக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : எம். சிகாமணி; செயலாளர் : எஸ். ஏ. தாமசு; துணைச் செயலாளர் எம்.எஸ். சான்பாட்சா; பொருளாளர் : எம். எஸ். ஆபீப்; நகரப் பிரதிநிதி : கே. சோமசுந்தரம்; 15 பேர் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

மத்திய-மாநில...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"உண்மையில் திட்டமிடல், சடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக இந்தியாவில், வேறு பல காரணங்களால் நிறுத்தப்பட்டுவிட்டன என்றபோதிலும், மத்தியில் காங்கிரசும், மாநிலங்களில் வேறு கட்சிகளும் தோன்றியுள்ள புதிய நிலைமை, திட்டமிடுவதை வெகுவாகப் பாதித்துவிடவில்லை!

திட்டத்தின் அளவைப் பொறுத்தும், ஆதாரங்களைப் பொறுத்தும், மத்திய ஆட்சிக்கும்—மாநிலங்களுக்குமிடையே சில தகராறுகள் உள்ளன; ஆனால், இந்தத் தகராறு, காங்கிரசு மாநிலங்களுக்கும்—மத்திய அரசுக்கும் இடையேயும் உண்டு."

ஏ. பி. சனார்த்தனம் நன்றி அறிவிப்பு

"நான் தமிழகச் சட்டமன்ற மேலவைக்கு மேன்மைதங்கிய ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேரிலும், தந்தி மூலமும், மடல்கள் வாயிலாகவும் எனக்குப் பாராட்டுத் தெரிவித்த இயக்கத் தோழர்களுக்கும், நண்பர்கட்கும், ஏனைய பெருமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்"

என்று திரு. ஏ. பி. சனார்த்தனம் எம்.எல்.சி. அறிவிக்கிறார்.

சென்னை 91-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றம்

6—4—68-ல் மேற்படி மன்றப் பணிமனையில் வட்டச் செயலாளர் செ. மோகனப்பா அவர்களை ஆணையாளராகக் கொண்டு நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் வருமாறு :—

அவைத் தலைவர் : நா. சு. மணி; செயலாளர் : தெ. தட்சிணாமூர்த்தி; துணைச் செயலாளர் : டி. கே. சாமி; பொருளாளர் : கே. சௌந்திரராசன்; மற்றும் 7-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

கடலூர் நகர சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

28—3—68-ல், கடலூர் நகர சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் அமைக்கப்பட்டது; தலைமைச் சங்கச் செயலாளரும், மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு உறுப்பினருமான தோழர் சி. ஆர். கோலப்பா தலைமை வகித்தார்.

துவக்கத்தில் மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு உறுப்பினரான கடலூர் பி. கண்ணன், சவரத் தொழிலாளர்—சலவைத் தொழிலாளர் பிரச்சினைகளைப் பற்றியும், சங்க வளர்ச்சி குறித்தும் விளக்கினார்.

தலைமைச் சங்கத் தலைவர் எஸ். மாணிக்கம், தலைமைச் சங்கப் பொருளாளர் ஆர். கதிர்வேலு ஆகியோர், சங்க உறுப்பினர்களின் கடமைகள் குறித்துப் பேசினர்.

அடுத்து சங்க நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது; கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : கோ. இராமதாசு; செயலாளர் : கே. செல்வராசு; பொருளாளர் : தம்புசாமி; துணைத் தலைவர் : என். கன்னையன்; துணைச் செயலாளர் : என். வரதராசன்; மற்றும் 9 பேர் செயற்குழுவினர்.

மணி விழாக் குழு அமைப்பு

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் சூரக்குண்டு கிராமத்தைச் சார்ந்த ஏ. வேலுச்சாமி அவர்களின் மணி விழா அமைப்புக் கூட்டம் 18—4—68 காலை 11 மணியளவில் மதுரை மாவட்ட தி.மு.க. செயலாளர் திரு. எஸ். முத்து எம்.எல்.சி. தலைமையில் கூடியது; மேலூர் வட்டக் கழகத் தோழர்களும், ஊராட்சி மன்றத் தலைவர்களும், உறுப்பினர்களும் திரளாக வந்து கலந்துகொண்டனர்.

மணிவிழாவை சீரும் சிறப்புமாக நடத்தவேண்டிய வழிவகைகளைப் பற்றித் தோழர்கள் எஸ். முத்து எம்.எல்.சி., எஸ். எஸ். தென்னரசு, பெ. மலைச்சாமி எம்.எல்.ஏ., ஓ. பி. இராமன் எம்.எல்.ஏ., பெ. கோபால், கே. பி பாண்டியன், பெருமாள், மங்கையன், தாயுமான் ஆகியோர் பேசினர்.

முடிவில் கீழ்க்கண்ட மணி விழாக் குழு அமைக்கப்பட்டது:—

தலைவர்:—எஸ். முத்து எம்.எல்.சி.

துணைத் தலைவர் :— எஸ். எஸ். தென்னரசு.

செயலாளர்கள் :— பெ. மலைச்சாமி எம்.எல்.ஏ., ஓ. பி. இராமன் எம்.எல்.ஏ.

மற்றும் இருபது செயற்குழு உறுப்பினர்கள்.

மேலூர் வட்ட தி.மு.க. பொறுப்பாளர் எம். பொன்னையா நன்றி கூறினார்.

வருந்துகிறோம்

சேலம்-ஆத்தூர் வட்ட தி.மு.க. செயலாளர் தோழர் டி. கே. மாதவன் அவர்களின் 15-வயது மகன் கலைமணி, கடந்த 17—4—68 அன்று மருத்துவமனையில் இயற்கையெய்திய செய்தி கேட்டு வருந்துகிறோம்.

மகனை இழந்து வாடும் தோழர் டி. கே. மாதவன் அவர்கட்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரித்தாகுக. —(ஆ-ர்.)

தமிழ்ப் பண்பாட்டை வெளிப்படுத்தும் கண்ணுக்கினிய படைப்பு

உலகத் தமிழ் மாநாட்டுக் காட்சிகளடங்கிய திரைப்படம்

ஐ. நா. கல்வி நிறுவனத் தலைவர் பாராட்டு-- அமைச்சர் நெடுஞ்செழியனுக்கு மடல்

பாரிஸ், ஏப். 25 —

"உலகத் தமிழ் மாநாட்டுத் திரைப்படம் ஒரு மாபெரும் முயற்சியாகும் !

"மிகச் சிறந்த கண்ணுக்கினிய படைப்பு !

"அது, தமிழ் வரலாற்றையும், பண்பாட்டையும் துல்லிய மாக வலிவோடு வெளிப்படுத்துகிறது"

என்று, ஐ. நா. கல்வி—சமூக—பண்பாட்டுத் துறை இயக்குநரான திரு. எம். எஸ். ஆதிசேஷையா, குறிப்பிட்டுள்ளார்.

தமிழகக் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு எழுதியுள்ள மடலில், அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது :—

"அறிஞர் அண்ணா அவர்களை நானும், என் மனைவியும், ஐ. நா. கல்வி—சமூக—கலாச்சார அவைக்கு வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி கொண்டோம். குறைந்த நேரமே அவர் பாரிசில் தங்கியிருந்தாலும், அவரைப் பற்றி நான் நிறையத் தெரிந்துகொள்ள முடிந்தது.

"மற்றவர்களை வெற்றி கொள்ளும் ஆற்றலும், பிறர் விரும்பும் பண்பும் கொண்டவராக அவர் விளங்குகிறார்.

"அவருக்கு விருந்து நடந்து கொண்டிருக்கும் போதுதான்—அநேகமாக அவர் பாரிசிலிருந்து புறப்படுவதற்கு நான்கு மணி நேரத்துக்கு முன்புதான்—தற்செயலாக, உலகத் தமிழ் மாநாட்டுத் திரைப் படத்தை எடுத்துச் செல்வது பற்றி முதலமைச்சர் தெரிவித்தார்; அது கேட்டு நான், வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டேன்.

"அவரிடமிருந்து அந்தத் திரைப் படத்தைக் கேட்டு காலை 9-மணியளவில் வாங்கினேன; ஏறத்தாழ அரை மணி நேர அவகாசத்துக்குள் என் அலுவலக ஊழியர்கள், 'யுனெஸ்கோ' திரைப்பட அரங்கில் காலை 10 மணி முதல் 10-30 மணி வரையில் திரையிட்டுக் காண்பித்தார்கள்.

"இப்படத்தைக் காண ஐ. நா. அதிகாரிகளும், பிரமுகர்களும், அறிஞர்களும் வந்திருந்தனர்; படத்தின் தமிழ் விளக்கவுரைகளை நானே ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் மொழி பெயர்த்து மற்றவர்களுக்குச் சொன்னேன்.

"இவ்வுயர்ந்த படத்தை இவ்வளவு விரைவாகத் தயாரித்து அளித்த தங்களுக்கு எனது பாராட்டுக்கள்.

"தரமான படத்தைத் தயாரித்ததற்காக வாசன் அவர்களுக்கும் 'யுனெஸ்கோ'வின் பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன்.

"உலகத் தமிழ் மாநாட்டுத் திரைப் படத்துக்கு திரு. கருணாநிதி அவர்கள, மிகப் பொருத்தமான கவிதை நயத்துடன் விளக்கம் தந்திருப்பது மிகச் சிறப்பாக இருக்கிறது; அவருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

"இந்தத் திரைப் படத்தின் பிரதி ஒன்றினை 'யுனெஸ்கோ'-வுக்கு (ஐ. நா. கல்வி — சமூக — கலாச்சார நிறுவனம்) அனுப்பிவைக்கு மேண்டுகிறேன். இப்படத்தை 'டெலிவிஷனி'ல் காட்டுவதற்கு ஏற்ப சுருக்கித் தயாரித்துவருவதாக முதலமைச்சர் என்னிடம் தெரிவித்தார்.

"'யுனெஸ்கோ'வுக்கு நீண்ட படத்தையும்—ஆங்கில விளக்கத்துடன் — அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் அதை பிரெஞ்சு—ஸ்பானிஷ் — இரஷ்யன் — ஜெர்மன் — அராபிய மொழிகளில் தயாரித்துக் கொள்கிறோம்.

"அக்டோபர் 15-ம் நாள் கூடவிருக்கும் ஐ.நா. பொது மாநாட்டின் போது இந்தப் படத்தை உங்கள் முன்னிலையில் திரையிட வேண்டும் என்று 'யுனெஸ்கோ' நிறுவனத்தினர் விரும்புகின்றனர். இங்கு வரவிருக்கும் இந்தியக் குழுவில் தங்களையும் ஓர் உறுப்பினராகச் சேர்க்கத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியும், டி. சென்னும் ஏற்பாடு செய்வர் என்று நான் நம்புவதாக முதலமைச்சரிடம் கூறினேன். நான் கேள்விப்பட்ட வரையில், இந்தத் தடவை இந்தியத் தூதுக் குழுவுக்கு, சென் தலைமைதாங்க மாட்டார் எனவும், அநேகமாக உங்களைத் தலைமைதாங்குப் படி கேட்டுக்கொள்வர் என்றும் அறிகிறேன்.

"இனி, படத்தைப் பற்றி ஓரிரு வார்த்தை; படத்தைப் பற்றிய ஆங்கில வர்ணனை ஒரு பிரச்சினை என்று நினைக்கிறேன்; 'கருணாநிதி அவர்களின், உள்ளத்தைத் தொடவைக்கும் கவிதை நயமான வர்ணனைகளுக்கு ஒப்பாக ஆங்கில மொழிபெயர்ப்பு விளக்கம் அமைக்க முடியும்' என்று நான் கருதவில்லை; அது, சுயேச்சையான மொழிபெயர்ப்பாக இருக்க வேண்டும்; அல்லது செய்திப் பட நிபுணர் ஒருவரைக் கொண்டு தனியாகப் பட வர்ணனையை ஆங்கிலத்திலேயே தயாரிக்க வேண்டும்.

"பழம்பொருள் காட்சியின் சில பகுதிகளையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம். மற்றும், மாநாட்டின் சில காட்சிகளையும், பல்கலைக் கழகத்தையும் படத்தில் சேர்க்கவும். அப்படிச் செய்வதால், தமிழுடன் அனைத்து நாட்டுச் சக்தியும் இணைந்த ஒரு தோற்றத்தை உலக மக்கள் காண்பர்.

"ஆங்கில வர்ணனையில், 'யுனெஸ்கோ' ஏற்பாடு பற்றியும், அது, மாநாட்டில் பங்கு பற்றியது குறித்தும் குறிப்பிட வேண்டுகிறேன்."

மே நாள் விழா

மாவட்ட -- வட்ட -- கிளைக் கழக நிர்வாகிகளுக்கு வேண்டுகோள்

உலகத் திருநாளான மே நாள் விழாவினை, 1—5 - 68 அன்று நாடெங்கும் சீரும் சிறப்புமாகக் கொண்டாட அனைத்துக் கட்சிகளும் — தொழிற்சங்கங்களும் கொண்ட அனைத்துக் கட்சிக் குழு விடுத்துள்ள வேண்டுகோளுக்கு ஏற்ப, நாடெங்கும் உள்ள தி. மு. கழக மாவட்ட—வட்ட (சென்னையில் பகுதி)—கிளைக் கழக நிர்வாகிகள், ஆங்காங்குள்ள அனைத்துக் கட்சிகள்—தொழிற்சங்கங்கள் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டு மே நாள் விழாவினை—வரலாற்றுச் சிறப்புக்குரியதாய் விளங்கிடும் வகையில் கொண்டாடுவதற்கு, முனைந்து ஆவனசெய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நகராட்சித் தலைவர்கள் மாநாடு

நகராட்சிகளின் தலைவர்கள்—ஆணையர்கள் மாநாடு, மே 11, 12-ம் நாட்களில் சென்னையில் நடைபெறும்.

நடக்க இருப்பவை

26--4--68

வாகைக்குளம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மந்தைத் திடலில்; தலைவர் : இரா. சிவன்காளை ; பேசுவோர் : ஆ, திராவிடமணி, உமாகண்ணுசாமி, மு. க. எழில் மன்னன், பி. தர்மன், மு. காஜா மைதீன், ஆர். கே. வேலன், ச. பொன்னுச்சாமி, ச. மா. பாண்டியன்.

குருவரெட்டியூர்

எம். ஜி. ஆர். மன்றத் துவக்க விழா ; இரவு 7-மணிக்கு மாரியம்மன் திடலில் ; திறப்பாளர் : இ. எம். நடராசன் எம்.எல் ஏ.: தலைவர் : சிவ. நடராசன் ; கொடியேற்றுபவர் : ஆர். நாராயணசாமி ; பேசுவோர் : ஆ. திராவிடமணி, அ. வெற்றிவேல், அ. க. துரைராசு, மற்றும் பலர்.

ஜி. ஏ. அப்பன் புதுடில்லி பயணம்

நாடாளுமன்ற மேலவை (கழக) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. ஜி ஏ. அப்பன் பி ஏ., 29—4—68 அன்று பதவியேற்பதற்காக 25—4—68 இரவு 8-மணிக்கு சென்னை சென்டிரல் இரயில்நிலையத்திலிருந்து கிராண்டு டிரங்க் எக்ஸ்பிரஸ் மூலம் புதுடில்லிக்குப் பயணமாகிறார்.

அமெரிக்க ஏடுகளில் அண்ணா

முதல் பக்கத்தில் முக்கிய இடம் பெற்ற பேட்டிச் செய்தி

நியூஹேவன், ஏப். 25—

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களின் வருகை குறித்து, நியூஹேவனிலுள்ள பெரிய பத்திரிகைகளெல்லாம், செவ்வாயன்று சிறப்பாகச் செய்திகள் வெளியிட்டன.

காலையில் வெளியாகும் 'நியூ ஹேவன் ஜர்னல் கூரியர்' என்ற ஏடு, முதல் பக்கத்தில் நான்கு பத்தியளவில் யேல் பல்கலைக் கழகத்தில் அண்ணா அவர்கள், நிருபர்களுக்கு அளித்த பேட்டியை வெளியிட்டது; முதல் பக்கத்தில் அவரது புகைப் படத்தையும் வெளியிட்டது.

"புதிய 'சப்' விருந்தாளி—தமது நாட்டின் அமைதிப் பணி குறித்து இந்தியத் தலைவர்" என்ற பெரிய தலைப்புடன் பேட்டியை வெளியிட்டு, 'அமைதித் தூதர்' என்ற முறையில் அல்லாது, 'இந்தியா அண்மை வருங் காலத்தில், உலக விவகாரங்களில் பெரும்பணி எதுவும் ஆற்ற முடியாது என்று அவர் கூறியதை அது மேற்கோள் காட்டியிருந்தது.

வியட்நாம் பற்றி....

வியட்நாம் குறித்து அண்ணாவின் கருத்துக்கள் பற்றி அந்த ஏடு தெரிவித்த கருத்து வருமாறு :—

"எங்கு பேச்சு நடத்துவதென்பது பற்றிய தகராறு, இரு தரப்பிலும் மனமில்லாததற்கு அறிகுறியல்ல என்று அவர் கருதுகிறார் ; ஏனெனில், 'இரு தரப்பினருக்கும் மனமிலலையென்றால், 'உலகுக்கு உய்வு இல்லை ; நான் இவ்வாறு நினைககவில்லை' என்று அவர் கூறினார்."

இந்தியாவும் உலகும்

மாலையில் வெளியாகும் 'நியூ ஹேவன் ரிஜிஸ்டர்' என்ற பத்திரிகை, நிருபர்கள் சந்திப்புப் பற்றி மூன்று பத்திச் செய்தி வெளியிட்டு, அண்ணாவின் படத்தையும் அச்சிட்டிருந்தது.

இந்த இதழின் செய்தியாளர் இராபர்ட் கில்பாட்ரிக் என்பவர், அதை எழுதியிருந்தார் ; 'இந்தியாவின் பிரச்சினைகள், உலகுக்கு ஒரு தடை' என்று அவர் தலைப்புப் போட்டிருந்தார்.

பல்கலைக் கழகத்தில்....

'சப் பெல்லோஷிப்' பெற்ற தலைவர் என்ற முறையில், யேல் பல்கலைக் கழகத்தில் அண்ணா அவர்கள், தமது அலுவல்களில் தொடர்ந்து ஈடுபட்டார்.

டிமோத்தி டுவைட் கல்லூரி முதல்வர் தாமஸ் கோடார்டு பர்கின் இல்லத்தில் செவ்வாயன்று காலையில் சிற்றுண்டிக்குப் பின்பு, மாணவர்கள் குழு ஒன்றைச் சந்தித்து உரையாடினார் ; இக்கூட்டத்துக்கு நிருபர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இதுபோலத்தான், செவ்வாயன்று அவர் நடத்திய மற்றக் கல்வித் துறைச் சந்திப்புக்களும்; இது, தொன்றுதொட்டுக் கடைபிடிக்கப்பட்டுவரும் ஒரு கொள்கை என்றும், 'சப்' விருந்தினராக வரும் தலைவர்களும், யேல் மாணவர்களும் குறுக்கீடுகள் இன்றித் தாராளமாக மனம் விட்டுப் பேசிக் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ள இந்த ஏற்பாடு வகை செய்கிறது என்றும் 'பெல்லோஷிப்' அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிற்பகல் அரசியல் – பொருளியல் மேல் படிப்பு மாணவர்களுடன் அண்ணா நடத்திய சந்திப்புக்கும் நிருபர்கள் அனுமதிக்கப்படவில்லை.

யேல் மாணவர்களைக் கவர்ந்தார் அண்ணா

அவரது நகைச்சுவைமிகு பேச்சில் உள்ளத்தைப் பறிகொடுத்தனர்

பல்கலைக் கழக அறிவிப்புப் பலகையில் சிறப்பிடம் பெற்ற நிகழ்ச்சி நிரல்

நியூஹேவன், ஏப். 25—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் யேல் நிருபர்கள் கூட்டத்தில் எல்லாக் கேள்விகளுக்கும் பொறுப்புடன் பதிலளித்து, வெளிப்படையாகக் கருத்துக்கள் தெரிவித்தது குறித்துப் பல்கலைக் கழகப் பத்திரிகைத் துறை மாணவர்களும், மற்றச் செய்தியாளர்களும் மகிழ்ச்சி தெரிவிததுள்ளனர்.

பல்கலைக் கழகத்தின் செய்தி நிலையத்தில் திங்களன்று இந்த நிருபர்கள் கூட்டம் நடைபெற்றது ; ஒரு மணி நேரத்துக்குமேல் இது நீடித்தது ; முதல் அமைச்சரின் நகைச்சுவையும், இளைஞர்களிடையே அவர் தாராளமாகப் பழகியதும், மனம் விட்டுப் பேசுவதற்குத் தங்குதடையில்லாத சூழ்நிலை அளித்தன.

பலமுறை அவர், இளைஞர்கள் வாய்விட்டுச் சிரித்து மகிழுமாறு செய்தார். 'மாணவர்களின் செயல்கள் தங்களுக்குப் பிடித்திருந்தால், அவர்களை, அரசியல்வாதிகள் தட்டிக்கொடுக்கின்றனர் ; பிடிக்காவிட்டால் பேச்சுமூச்சு இல்லாமல் நழுவி விடுகிறார்கள்' என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டபோது, அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர் !

சிறப்பிடம் பெற்றது

யேல் பல்கலைக் கழக அறிவிப்புப் பலகைகளிளெல்லாம் அண்ணா வருகை சிறப்பிடம் பெற்றிருந்தது ; பல வண்ணச் சுவரொட்டிகளும், புகைப்படங்களும் எங்கும் காட்சியளித்தன ; அண்ணா நிகழ்ச்சி நிரலகள் விரிவாக இடம் பெற்றன.

இந்தியப் பாடங்கள்

டிமோத்தி டுவைட் கல்லூரி மாணவர்கள் இந்திய வரலாறு பற்றி என்னென்ன பாடங்கள் படிக்கலாம் என்பது ஒரு அறிவிப்புப் பலகையில் குறிப்பிடப்பட்டிருந்தது

ஒரு பிரிவு :—இந்திய நாகரிகத்தின் பிறப்பும் வளர்ச்சியும் ; இது, இந்துக்கள் காலத்துக்குச் சிறப்பிடம் கொடுக்கிறது.

மற்றொன்று :—மொகலாயர் காலம் முதல் இன்றைய இந்தியா வரை ; இது, இஸ்லாமிய நாகரிகத்துக்கு முக்கியம் தருகிறது.

மூன்றுவது :—18வது நூற்றுண்டு முதல் இந்நாள் வரையில் பொதுவான இந்திய வரலாறு.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பெரும் அளவில் பயன்படுத்தப்பட்டதற்குப் பின்னர்தான், அந்த இடத்தில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்க முடியாத நிலையில் அந்த இடம் அமைந்திருப்பது அரசுக்குத் தெரியவந்தது"

என்றும் அவர் தொடர்ந்து பேசுகையில் சொன்னார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.